பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 07 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசிய சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. இளைஞர்களின் செயல் திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இந்தியா ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தி வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.
3. நாட்டில், நடப்பு நிதியாண்டில் ஏழு லட்சத்து 73 ஆயிரம் கோடி ரூபாய் நேரடி வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.
4. ஹரியானா, ஆந்திரப்பிரதேச மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேலும் பத்து நாட்களுக்கு நீட்டித்துள்ளது.
5. 19 வயதுக்குட்பட்டோருக்கான இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில், விக்கெட் இழப்பின்றி 186 ரன் எடுத்துள்ளது.

இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

மேற்காசிய போர் சூழலில் நிலவிவரும் மாற்றங்களை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், ஒட்டுமொத்த உலகின் பொருளாதார மற்றும் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் **Hormuz** நீரிணைப்பகுதியில் சரக்கு கப்பல் போக்குவரத்து பாதுகாப்பாகவும், எவ்வித தடையின்றியும் நடைபெற வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

புதுதில்லியில் உள்ள ஈரான் நாட்டின் துணைத்தூதர் திரு **Mohammad Javad Hosseini** வரவழைக்கப்பட்டு, **Hormuz** நீரிணைப்பகுதியில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு இந்திய மாலுமி உயிரிழந்ததற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதாக கூறினார்.

இந்த சம்பவத்தில் பல இந்திய மாலுமிகள் உட்பட யுக்ரைன் உள்ளிட்ட நாடுகளின் மாலுமிகளும் காயமடைந்ததாக அவர் தெரிவித்தார்.

**Hormuz** நீரிணைப்பகுதியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில், உடனடியாக சமரச பேச்சுவார்த்தைகளை நடத்தி, தீர்வுகாண வேண்டும் என இந்தியா சார்பில், ஈரான் துணைத் தூதரிடம் வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் தெரிவிக்கப்பட்ட கண்டனத்தையும், ஈரான் துணைத் தூதரிடம் இந்தியா வலியுறுத்தியதாக திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

இந்தியா — பிரிட்டன் இடையிலான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவின் வர்த்தக பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல் என்று வர்த்தகத்துறை செயலர் திரு ராஜேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் இரண்டு பெரிய நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார ஒத்துழைப்புக்கு வழிவகுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாளை முதல் செயல்பாட்டுக்கு வரும் இந்த ஒப்பந்தம், இருதரப்பு வர்த்தகம், முதலீடுகளில் ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் ஒட்டுமொத்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இது அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தகத்துக்கான பல வரிகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு சில வர்த்தக நடவடிக்கைகளுக்கு முற்றிலுமாக வரி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பால்வளம், வேளாண்மை, போன்ற வர்த்தகத்திற்கும், இந்திய பொருட்கள் மற்றும் சேவைகள் பிரிட்டனுக்கு செல்ல வழி ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்னணு வர்த்தகம், அரசு கொள்முதல், புதுமைத் திட்டங்கள், சிறு-குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்படும் என்றும் திரு ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

இளைஞர்களின் செயல் திறனை மேம்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் பிரிக்ஸ் நாடுகளின் தொழிற்சங்கங்கள் மாநாட்டில் பேசிய அவர், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இளைஞர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில், **Skill India** இயக்கம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுமட்டுமின்றி, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட தொழில்நுட்பங்களிலும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வானிலை மற்றும் மண் சார்ந்த வேளாண் மேம்பாட்டுக்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநில தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள வேளாண்

பல்கலைக்கழகங்கள், வேளாண் ஆராய்ச்சி மையங்களுடன் இணைந்து, மாநில அரசு இத்திட்டத்தை செயல்படுத்தும் என்று கூறினார்.

உருளைக்கிழங்கு மற்றும் சணல் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்கள் மால்டா உள்ளிட்ட நான்கு இடங்களில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு மின்னணு அடையாள அட்டைகள் வழங்க மாநில அரசு மேற்கொண்டுள்ள திட்டத்தை தாம் வரவேற்பதாக திரு திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<>>>>>>

நாட்டில், நடப்பு நிதியாண்டில் ஏழு லட்சத்து 73 ஆயிரம் கோடி ரூபாய் நேரடி வரி வசூலிக்கப்பட்டுள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் இருந்ததைவிட 16 புள்ளி ஒன்று ஒன்று சதவீதம் கூடுதல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்பரேட் வரி மூலம் 3 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாயும், இதர வரிகள் மூலம் 4 லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாயும் பெறப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக செலுத்தப்பட்ட வரிகள் திரும்ப வழங்கப்பட்டுள்ளதாகவும் வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

ஹரியானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேலும் பத்து நாட்களுக்கு நீட்டித்துள்ளது.

இதுதொடர்பாக ஆணையம் வெளியிட்டுள்ள புதிய அட்டவணையில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், இம்மாதம் 24-ஆம் தேதிவரை நேரடியாக வீடுகளுக்கு சென்று விவரங்களை சரிபார்ப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 31-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும், இறுதி வாக்காளர் பட்டியல் அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான கோரிக்கைகளை உரிய படிவத்தில் இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், ஆகஸ்ட் 30-ஆம் தேதிவரை அளிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

சேலத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் ஆதார் சேவை மையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின்கீழ், இந்த மையம் வாரத்தின் ஏழு நாட்களும் செயல்படும்.

சேலத்தில் திறக்கப்பட்டுள்ள ஆதார் சேவை மையத்தின் மூலம் ஒரே நேரத்தில் எட்டு பேர் தங்களுடைய ஆதார் விவரங்களை புதுப்பித்துக்கொள்ள முடியும் என்றும் அதன் மேலாளர் திரு மாதவன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — மாதவன் - 25 Sec.)***

<<<<<>>>>>>

நாட்டிலேயே முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கர்நாடகாவில் அமைக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு **D K** சிவகுமார் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் **Google Connect India** நிகழ்ச்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்த அதற்கான முனையம் அமைக்கப்படும் என்று கூறினார்.

அரசு தொழில் நிறுவனங்கள், கல்விக்கழகங்கள் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இத்துறையில் முன்னிலை மாநிலமாக கர்நாடகாவை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் 40 சதவீதம் கர்நாடகாவிலிருந்து செயல்பட்டு வருவதாக கூறிய அவர், இம்மாநிலத்தில் 17 ஆயிரம் புத்தொழில்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நிர்வாக சீரமைப்பிற்கும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த போவதாக திரு D K சிவகுமார் கூறினார்.

<<<<<>>>>>>

இந்தியா — மாலத்தீவு இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கான இருதரப்பு தாராள வர்த்தக ஒப்பந்தத்துக்கான முதல் சுற்று பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக நடைபெற்றுள்ளதாக வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காணொலி வாயிலாக இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவின் முக்கிய வர்த்தக நாடாக இந்தியா விளங்குகிறது என்றும், கடந்த நிதியாண்டில் 771 மில்லியன் டாலர் அளவுக்கு இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் நடைபெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தில்லியில் வரும் 27-ஆம் தேதி முதல், அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் போட்டிக்கான இலட்சினை இன்று வெளியிடப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் இதனை வெளியிட்டு பேசிய தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, விளையாட்டு வடிவமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

காமன்வெல்த் நாடுகளை சேர்ந்த பல்வேறு அணிகள் இந்த போட்டியில் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தில்லி விளையாட்டுத்துறை அமைச்சர் **Ashish Sood,** சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கான மையமாக தில்லி உருவெடுத்து வருவதாக தெரிவித்தார்.

இந்த போட்டியில் காமன்வெல்த் நாடுகளை சேர்ந்த **25** அணிகள் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்குட்பட்டோருக்கான இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று, இந்தியா முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில், விக்கெட் இழப்பின்றி **186** ரன் எடுத்துள்ளது.

**Galle-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இலங்கை முதல் இன்னிங்சில் **424** ரன் எடுத்துள்ளது.

---------------

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற **259** ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த இங்கிலாந்து **47** புள்ளி ஐந்து ஓவரில் **258** ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>>**